**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar :**

**Miscellaneous :**

**Preliminary Register :** **Case No.CC.71 of 2018**

**Sessions :**

**Deposition of Witness for Prosecution PW5**

**Defence**

**Name : சரத்குமார்.**

**Father's/ Husband Name : பெரியசாமி**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2021.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் ஆங்கரையில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இலால்குடி ரவுண்டானா அருகில் கூட்டமாக இருந்தார்கள், போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பணம் காணவில்லை என்பது

தொடர்பாக போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள், என்னோடு சேர்ந்து இரண்டு நபர்களிடம் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

<u>கு.வி ( எதிரிகள் தரப்பில் )</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன். நான் கையொப்பம் செய்வதற்கு முன்பு ஒருவர் கையொப்பம் செய்திருந்தார். அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன். பிறகு தள்ளி நிற்க சொன்னார்கள். எனக்கு முன்பு கையொப்பம் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. நான் மணக்காலிலிருந்து வரும்போது இலால்குடி ரவுண்டானாவில் கும்பலாக இருந்தது, நான் நின்று வேடிக்கை பார்த்தேன். அப்போது தான் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன் பிறகு அங்கிருந்து நான் சென்றுவிட்டேன், காவல் நிலையத்திற்கு போலிசார் என்னை அழைக்கவில்லை. அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar :**

**Miscellaneous :**

**Case No.CC.71 of 2018**

**Preliminary Register :**

**Sessions :**

**Deposition of Witness for Prosecution PW6**

**Defence**

**Name : சையது**

**Father's/ Husband Name : அல்லி**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2021.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் இலால்குடியில் வசித்து வருகிறேன். கறி கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 2018ம் ஆண்டு ஒரு நாள் நாகம்மையார் கோவில் தெருவிற்கு எதிரில் மணக்கால் ரோட்டில் உள்ள கழிவறை அருகில் போலிசார் நின்று வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவரது பணத்தினை யாரோ பறித்து சென்றுவிட்டதாக கூறி விசாரித்துக்கொண்டிருந்தாகள். கையொப்பம் கேட்டார்கள், கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>கு.வி ( எதிரிகள் தரப்பில் )</u>

நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. அப்பபோது நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை. நான் கையொப்பம் செய்த நாள் அன்று எனது கடையை திறக்கவில்லை. மணக்கால் சாலையில் உள்ள தொன்போஸ்கோ பள்ளி மைதானத்திற்கு செல்லவேண்டும் என்றால் அங்குள்ள தேவாலயத்தின் வாசல் வழியாக பள்ளிக்கு சென்று அதனுள் நுழைந்து தான் பள்ளி மைதானத்திற்கு செல்லவேண்டும். அதற்கு வேறு வழி இல்லை. தொன்போஸ்கோ பள்ளி மைதானத்திற்கும் இலால்குடி ரவுண்டானாவிற்கும் இடையில் சுமார் அரை கி.மீ துாரம் இருக்கும். இலால்குடி ரவுண்டானாவிற்கும், இலால்குடி பேருந்து நிறுத்தத்திற்கு இடையில் 100 மீட்டர் தொலைவு தான் இருக்கும்.